CEMCA

# செவிச்செல்வம்

## “Diploma in Community Radio & Mass Communication”

# Radio Enabled Learning

August -2019

STUDY MATERIAL

CHAPTER 5 - FORMATS FOR RADIO PROGRAMMES

SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# INTRODUCTION AND DECIDING A FORMAT
# வானொலி நிகழ்ச்சி வடிவங்களைத் தீர்மானித்தல்

**CHAPTER - 5**

**EPISODE - 22**



SRUTHI CRS 90.8 MHz

Sri Sankara Arts & Science College Campus, Enathur, Kanchipuram – 631 561

# அறிமுகம்

- முந்தைய அத்தியாயங்கள் ஒரு வானொலி நிலையம் எவ்வாறு இயங்குகிறது என்பது குறித்து அறிந்துகொள்ள உதவின.

- இந்த அத்தியாயம் வானொலி நிகழ்ச்சிகளை எவ்வாறு வடிவமைக்கலாம் எத்தகைய வடிவங்களில் வழங்கலாம் என்பதைக் குறித்து விளக்குகிறது.

- இந்த அத்தியாயத்தில் தொலைபேசி மற்றும் இதர தொலைத்தொடர்பு வசதிகளை கொண்டும், சமூக ஊடகங்களைக் கொண்டும் எவ்வாறு வானொலி நிகழ்ச்சிகளை வழங்கலாம் என்பது குறித்தும் விவரிக்கப்பட்டுள்ளது.



# செய்தித்தாளும் வானொலியும்


தினமணி

வெற்றிகரமாக விண்ணில் பாய்ந்தது சந்திரயான்-2

குடியரசுத் தலைவர், பிரதமர் வாழ்த்து

விண்கலத்தில் 14 உபகரணங்கள்


திருவள்ளூர்

தினமணி சென்னை 3

வாக்களிக்க பொதுமக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

மாவட்ட நீதிபதி செல்வநாதன்

குடிநீர் கேட்டு ஊராட்சி அலுவலகத்தை முற்றுகையிட்ட பெண்கள்

Tue, 26 March 2019

https://epaper.dinamani.com/c/37937022


வாழ்வில் வெற்றி பெற கடின உழைப்பு, விடா முயற்சி தேவை

Mon, 04 February 2019

epaper.dinamani.com/c/36385757


தினத் தந்தி

கூடங்குளம் அணு உலை பணி முழுவீச்சில் நடைபெறுகிறது

விரைவில் மின்சார உற்பத்தி தொடங்கும்

70 ரஷிய விஞ்ஞானிகள் உள்பட 1,000 பேர் பணிக்கு திரும்பினார்கள்

VELAMMAL VIDYALAYA


தினமலர்

அங்காடி தெரு


பள்ளி மாணவர்களுக்கு மரக்கன்று விநியோகம்


தினகரன்

'நிவர்' புயல் கரை கடந்தும் மக்கள் தத்தளிப்பு

வட மாவட்டங்கள் கடும் பாதிப்பு



## செய்தித்தாள் ⇄ வானொலி

**செய்தித்தாள்**

- முகப்புப்பக்கம்
- வண்ணமயமான இணைப்புகள்
- வகைப்படுத்தப்பட்ட விளம்பரங்கள்
- தலையங்கம்
- சிறப்புச் செய்திகள்
- மாநிலச் செய்திகள்
- தேசியச் செய்திகள்
- உலகச் செய்திகள்
- விளையாட்டுச் செய்திகள்
- திரைத்துறையில் நடக்கும் நிகழ்வுகள்

**வானொலி**

- பேச்சு
- நேர்முகங்கள்
- விவாதங்கள்
- மரபிசை(கர்நாடக இசை)
- நாட்டுப்புற இசைவடிவங்கள்
- மெல்லிசை
- நாடகம்
- வினாடிவினா



# வானொலி நிகழ்ச்சிகளை எந்த வடிவத்தில் வழங்கலாம் என முடிவெடுத்தல்.

- வானொலி நிலையத்தின் ஒலிபரப்பு எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படும் புள்ளிவிவரக் கணக்கெடுப்புகள் வானொலி நிகழ்ச்சிகளைத் தீர்மானிக்கப் பெரிதும் உதவுகின்றன.
- இத்தகைய ஆய்வுகள் மக்களின் தேவை என்ன என்பதைப் புலப்படுத்தும்.
- ஒரு வானொலி நிலையம் கையாலும் மொழி அதன் ஒலிபரப்பு எல்லைக்குட்பட்ட சமூகத்தில் வாழும் மக்கள் பயன்படுத்தும் வட்டார மொழியில் இருத்தல் அவசியம்.
- ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப்பற்றி பெருவாரியான மக்கள் எவ்வாறு புரிந்து வைத்துள்ளார்கள் என்பதை அறியவும், தீர்மானிக்கவும் உதவும்.
- வானொலி நிலையம் இயங்கும் பகுதியில் வழக்கத்தில் இருந்துவரும் நாட்டுப்புறக் கலை வடிவங்கள் குறித்து அறிந்துவைத்திருக்க வேண்டும்.

ஆகியவை வானொலி நிகழ்ச்சிகளைத் தீர்மானிப்பதில் முக்கிய அங்கம் வகிக்கின்றன.



# வானொலி உரைகள்

- வானொலியில் ஒலிபரப்பப்படும் உரைகள் சமுதாய வானொலியின் ஒலிபரப்பு எல்லைக்குட்பட்ட பகுதிவாழ் மக்களுக்குப் பயன்படத்தக்க வகையில் வழங்கப்பட்டு வருகின்றன.
- சமூக மேம்பாட்டுக்கு உழைத்த தலைவர்களின் வாழ்க்கை வரலாறுகள்.
- மக்கள் நல்வாழ்வுக்குரிய உடல்நலம் தொடர்பான துறைசார் வல்லுனர்கள், மருத்துவர்கள் ஆகியோர் வழங்கும் உடல்நலம் தொடர்பான தகவல்கள்.
- இலக்கிய ஆர்வலர்கள், பேராசிரியர்கள் போன்றோரின் சொற்பொழிவுகள்.
- சமூக ஆர்வலர்களின் சமுதாய முன்னேற்றக் கருத்துக்கள்.
- உணவுப் பாதுகாப்பு, குடும்பநலம், சட்டம் தொடர்பாக வல்லுனர்கள் வழங்கும் தகவல்கள்
- அரசுத் திட்டங்கள் குறித்து துறை சார்ந்த அதிகாரிகள் வழங்கும் தகவல்கள்.

போன்றவற்றை இத்தகைய வானொலி உரை நிகழ்ச்சிகளுக்கு உதாரணமாகக் கூறலாம்.



# நாட்டுப்புற கலை வடிவங்கள்

- ஒரு சமுதாய வானொலியின் ஒலிபரப்பு எல்லைக்குட்பட்ட பகுதியில் வழக்கத்தில் இருந்துவரும் மரபுசார் நாட்டுப்புறக் கலைகளான வில்லுப்பாட்டு,தெருக்கூத்து, முகவீணை, கும்மிப்பாட்டு, கதைப்பாடல், நாட்டுப்புறப் பாடல்கள் போன்றவற்றை அப்பகுதியில் வாழும் நாட்டுப்புறக் கலைஞர்களைக் கொண்டு அவர்கள் இருக்கும் இடத்திற்குச் சென்றோ அல்லது வானொலி நிலையத்திற்கே அவர்களை அழைத்துவந்தோ நாட்டுப்புறப் பாடல்களையும், பல வகையான நாட்டுப்புற இசை வடிவங்களையும் ஒலிப்பதிவுசெய்து, சமுதாய வானொலிகள் ஒலிபரப்புகின்றன.



# நாடகங்கள்

- சமுதாய வானொலி இயங்கிவரும் பகுதி வாழ் மக்களுக்குப் பயன்படும் வகையில் பல்வேறு வானொலி நாடகங்களை மாணவர்கள், எழுத்தாளர்கள், ஆர்வலர்கள் ஆகியோரைக்கொண்டு
  - டெங்கு விழிப்புணர்வு நாடகம்
  - சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நாடகம்
  - குழந்தை திருமண தடுப்பு நாடகம்
  - வாக்காளர் விழிப்புணர்வு நாடகம்
  - குடும்பக் கட்டுப்பாடு நாடகம்
  - சுகாதாரம் குறித்த விழிப்புணர்வு நாடகம்

  போன்ற பல்வேறு பொருண்மைகளில் சமுதாய வானொலிகள் நாடகங்களைத் தயாரித்து ஒலிபரப்பி வருகின்றன.



# நேர்காணல்கள்

- சமுதாய வானொலியில் ஒலிபரப்பப்படும் நேர்காணல்கள் சமுதாய வானொலியின் ஒலிபரப்பு எல்லைக்குட்பட்ட பகுதியில் வாழும் மக்களுக்குத் தன்னம்பிக்கையையும், ஊக்கத்தையும், வழிகாட்டுதல்களையும் தருவதாக அமைகின்றன.
- சமூகத்தில் சாதனை படைத்த தொழில் முனைவோர், மருத்துவர், விவசாயிகள், பெண் ஆளுமைகள், எழுத்தாளர்கள், சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த பெண்கள் எனப் பலதரப்பட்ட மக்களிடம் இத்தகைய நேர்காணல் நிகழ்த்தப்பட்டு அவை சமுதாய வானொலிகளில் ஒலிபரப்பப்படுகின்றன.



# வினாடி வினா

மாணவர்களுக்கும்,போட்டித் தேர்வு எழுதுபவர்களுக்கும், பொது அறிவை வளர்த்துக்கொள்ள விரும்புபவர்களுக்கும் பயன்படுத்தக்க வகையில்

- இலக்கிய வினாடி வினா
- கணித வினாடி வினா
- பொதுஅறிவு வினாடி வினா
- விளையாட்டு வினாடி வினா
- அறிவியல் வினாடி வினா

எனப் பல நிலைகளில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களைக்கொண்டு இத்தகைய வினாடி வினாப் போட்டிகள் நடத்தப்பட்டு, அவை சமுதாய வானொலியில் ஒலிபரப்பப்பட்டு வருகின்றன.



# மரபிசை

- மரபுசார் இசை வடிவங்களான வீணை, நாதஸ்வரம், தவில், புல்லாங்குழல், வயலின், மிருதங்கம் போன்ற மரபுசார் இசைக் கருவிகளைக்கொண்டு இசை நிகழ்ச்சிகள் சமுதாய வானொலியில் ஒலிபரப்பப்படுகின்றன.

